## மதுரை அரவிந்த் மருத்துவமனையில்

# கண் நோய் சிகிச்சை விழிப்புணர்வு கண்காட்சி

மதுரை, அக். 9: மதுரை அரவிந்த் கண் மருத்துவமனை டாக்டர்கள் கிம், உஷா ஆகியோர் நிருபர்களிடம் கூறியதாவது:

'கண்ணே நலமா' கண்காட்சியை அரவிந்த் மருத்துவமனையின் கண் ஆராய்ச்சி மைய கட்டிடத்தில் மதுரை கலெக்டர் அன்சுல் மிஸ்ரா இன்று (அக்.9) துவக்கி வைக்கிறார். உலக கண்பார்வை தினமான அக்.11 வரை கண்காட்சி நடக்கிறது. மாலை 4 மணி வரை மாணவர்களும், மாலை 4 மணி முதல் இரவு 7 மணி வரை பொதுமக்களும் கண்காட்சியை இலவசமாக காணலாம். உலகில் 3 கோடியே 90 லட்சம் மக்கள் பார்வையின்றி வாழ்கின்றனர். இவர்களில் 25 சதவீதம் பேர் இந்தியாவில் உள்ளனர். கண்காட்சியில் கண் குறித்த அனைத்து மாதிரிகளும் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளது. பார்வை சோதனையும் இல

எங்கள் மருத்துவமனை சார்பில், மதுரை மாவட்டத்தில் 20 பள்ளிகள் தேர்வு செய்யப்பட்டு அங்கு நிலையான கண் பரிசோதனை மையங்கள் அமைக்கப்படுகிறது. இந்த பள்ளி ஆசிரியருக்கும் கண் பரிசோதனை தொடர்பான பயிற்சிகள் வழங்கப்படும். இதன்மூலம், மாணவர்களுக்கு ஏற்படும் கண் பாதிப்புகளை துவக்க நிலையிலேயே கண்டறிந்து இலவச சிகிச்சை அளிக்க திட்டமிடப்பட்டுள்ளது'

# மாணவர்களின் கண்குறைபாடு போக்க 'விஷன் காரிடார்'

## கண்காட்சி இன்று துவக்கம்

மதுரை, அக். 9-

''மாணவர்களின் கண் பரிசோதனைக்காக, பள்ளிகளில் 'விஷன் காரிடார்' ஏற்படுத்தப்படும்,'' என, மதுரை அரவிந்த் மருத்துவமனை டாக்டர்கள் கிம், உஷா கிம் கூறினர்.

அவர்கள் கூறியதாவது: இந்தியாவில் 20 கோடி பேருக்கு கண்களில் ஏதாவது ஒரு பாதிப்பு உள்ளது. இதில் 10 சதவீதம் பேர், சிகிச்சை பெறுவோராக உள்ளனர். மற்றவர்களிடம் அதற்கான விழிப்புணர்வு இல்லை. இந்தியாவில் 4.1 கோடி பேர் சர்க்கரை நோயாளிகள் உள்ளனர். இதில் 20 சதவீதம் பேர் விழித்திரை பாதிக்கப்பட்டோர்.

பள்ளி மாணவர்கள் பலருக்கு பார்வை குறைபாடு இருந்தும், சரிசெய்யும் விழிப்புணர்வு பெறவில்லை. பலருக்கு ஒரு கண் நன்றாக இருந்து, மற்றொரு கண் 'தூங்கும் கண்'ணாக (Lazy Eye) பாதிப்புடன் இருக்கும். துவக்கத்திலேயே கண்டறிந்து சரிசெய்யாவிட்டால், முழுப் பார்வை இழக்கலாம். எனவே, 20 பள்ளிகளில் கண்பரிசோதனை நடத்த, 'விஷன் காரிடார்' துவக்கப்பட உள்ளது.

இதில் விழிப்புணர்வு பெற, கண் விழிப்புணர்வு கண்காட்சி இன்று (அக்.,9) முதல் 11ம் தேதி வரை மருத்துவமனையில் நடக்கிறது. கலெக்டர் அன்சுல் மிஸ்ரா, துவக்கி வைப்பார். கண் நோய்கள், பாதிப்புகள், தீர்வுகள் குறித்து 20 அரங்குகளில் மாடல்கள் இடம்பெறும். காலை 9 முதல் மாலை 4 மணி வரை மாணவரும், மாலை 4 முதல் இரவு 7 மணி வரை பொதுமக்களும் கண்காட்சியை இலவசமாக பார்வையிடலாம்.

மேலும் வினாடிவினா, குறும்பட விளக்கம், அறுவை சிகிச்சை கூடம், பார்வையற்றோர் சிரமத்தை அறியும் வகையில் இருட்டறை உருவாக்கப்பட்டுள்ளது, என்றனர். மக்கள் தொடர்பு அலுவலர் ராமநாதன் உடனிருந்தார்.